28. மாற்று ஆள் பதிவேடு
29. கவாத்துப் பதிவேடு
30. ஊழியர் தண்டனை விவரப் பதிவேடு
31. படிவம்-95
32. கைது அட்டை
33. அரசினர் சொத்து விவரப் பதிவேடு
34 குடியிருப்புப் பதிவேடு
35. மிகை நேரப் படி பதிவேடு.
36. துப்பாக்கி

அ. உரிமம்.
ஆ. ஒப்படைத்தல்
இ. பகிர்மானம்

ஆகியவை குறித்த பதிவேடுகள்

| வரிசை எண். | பதிவேடு/ஆவணங்கள் | தமிழ் | ஆங்கிலம் | இரு மொழியிலும் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |

37. குறிப்பாணைப் புத்தகங்கள்
    - அ. பொதுக் குறிப்பாணை
    - ஆ. குற்றக் குறிப்பாணை
    - இ. மருத்துவக் குறிப்பாணை
    - ஈ. கிடங்குக் குறிப்பாணை
    - உ. பணக் குறிப்பாணை
    - ஊ. நினைவூட்டுக் குறிப்பாணை
38. பேருந்துப் பயண ஆணைச்சீட்டுப் பதிவேடு
39. விபத்துகள் பதிவேடு
40. போக்குவரத்து அடையாளப் பலவகைகள் பதிவேடு
41. போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் பதிவேடு
42. சாலைகள் பழுதுபார்த்தல் பதிவேடு.
43. 1.அ. பெயர்ப் பலகைகள்/வரைபடங்கள்/விளக்கப் படங்கள் அடங்கிய தொங்கும் அட்டைகள்.
    ஆ. பத்தாண்டு புள்ளிவிவர ஒப்பீட்டு அறிக்கைப் பலகை.
    இ. தகவல் பலகை.
    2. முத்திரைகள்
44. துறை மேலலுவலர் ஆண்டாய்வின்போது தமிழ்த் திட்டம் பற்றி எழுதியுள்ள குறிப்புகளின் பகுதி நகல்.
45. குற்றத் தணிக்கைப் பதிவேடுகள்.
46. தொலைபேசிப் பதிவேடு.
47. விசாரணை நாட்குறிப்புக் கோப்புகள்
48. ஒலிபெருக்கி உரிமம் பதிவேடு.
49. மனுக்கள் பதிவேடு.
50. துணை அலுவலக முறைப்பட்டி
51. நீண்ட விடுப்புப் பதிவேடு
52. வாராந்திர ஓய்வு முன்னறிவிப்புப் பட்டியல்
53. ஏவலர் அறைப் பதிவேடு.

| வரிசை எண். | பதிவேடு/ஆவணங்கள் | தமிழ் | ஆங்கிலம் | இரு மொழியிலும் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |
| 54. | அலுவலரின் கைப் புத்தகம் | | | |
| 55. | மதுவிலக்குக் குற்றப் பாகம் 3. | | | |
| 56. | துணை ரொக்கக் கணக்குப் பதிவேடு. | | | |
| 57. | காணாமற் போனவர்கள் பதிவேடு. | | | |
| 58. | வீடுகளைப் பூட்டிவிட்டு வெளியூர் செல்பவர்கள் தகவல் பதிவேடு. | | | |
| 59. | காவல் துறையினர் எச்சரிக்கைக் கடிதம் | | | |
| 60. | எடை சோதனைப் பதிவேடு. | | | |
| 61. | துப்பாக்கி சுடும் பயிற்சிப் பதிவேடு. | | | |
| 62. | கிராம வரலாற்றுப் பதிவேடு - பாகம்-4 | | | |
| 63. | போக்கிரி வரலாற்று ஏடு-பாகம்-5 | | | |
| 64. | மனு விசாரணைப் பதிவேடு | | | |
| 65. | நீதிமன்றக் கட்டணப் பதிவேடு | | | |
| 66. | வேதியல் பரிசோதனைப் பொருள் பதிவேடு | | | |
| 67. | போக்கிரிகள் தணிக்கைப் பதிவேடு | | | |
| 68. | பழைய குற்றவாளிகள் தணிக்கைப் பதிவேடு | | | |
| 69. | ஊர்க்காவல் குழு பதிவேடு. | | | |
| 70. | மனு ஒப்புகைச் சீட்டு | | | |
| 71. | காவல் (பாரா) மாற்றுப் பதிவேடு. | | | |
| 72. | உடை செல்லுப்பட்டி. | | | |
| 73. | பயணப்படி செல்லுப்பட்டி. | | | |
| 74. | தோட்டாக் கணக்குப் பதிவேடு. | | | |
| 75. | ஆயுத வைப்புப் பதிவேடு. | | | |
| 76. | சரக்குப் பேருந்து-பணியாளர் வருகைப் பதிவேடு | | | |
| 77. | வட்டங்களின் தேவைப் பட்டியல் தணிக்கைப் பதிவேடு | | | |
| 78. | வட்ட விவரப் புத்தகம் | | | |

| வரிசை எண். | பதிவேடு/ஆவணங்கள் | தமிழ் | ஆங்கிலம் | இரு மொழியிலும் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |
| 79. | குற்றப் பேரேடு. | | | |
| 80. | குற்றப் பதிவேடு. | | | |
| 81. | முடிவு அட்டவணைப் பதிவேடு | | | |
| 82. | ஆள்சேர்ப்புப் பதிவேடு | | | |
| 83. | தளவாடப் பதிவேடு | | | |
| 84. | குடியிருப்புக் கட்டடப் பேரேடு | | | |
| 85. | தேவைப்பட்டியல் புத்தகம் | | | |
| 86. | மாதிரி ஒப்பப் புத்தகம் | | | |
| 87. | சிறு பணிப் பதிவேடு. | | | |
| 88. | கால அட்டவணைப் பதிவேடு | | | |
| 89. | நகர அலுவல் பதிவேடு அறிக்கைகள்<br>வாரம்<br>இருவாரம்<br>திங்கள்<br>காலாண்டு<br>அரையாண்டு<br>ஆண்டு | | | |
| 90. | ஒழுங்குக் காப்பகப் பதிவேடு | | | |
| 91. | குற்றத் தொகுப்புப் பதிவேடு | | | |
| 92. | வாடகைப் பதிவேடு | | | |
| 93. | அயல்நாட்டுக் கடவுச் சீட்டுச் சரிபார்ப்புப் பதிவேடு. | | | |

தமிழ் வளர்ச்சி இயக்குநர்/
தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர், (ஆய்வு)
........................மாவட்டம்.

இணைப்பு - 20

Copy of G.O. Ms. No.537, Public (General -M) Department, dated 21.3.64

---

## ABSTRACT

Official language - Tamil - Introduction in the Department of the Secretariat - partial scheme of Tamil correspondence - Preparatory steps to be taken - orders issued.

**ORDER**

In G.O. Ms. No.225, Public (General - M), dated 13.2.1963, the Government ordered the introduction of a partial scheme of Tamil correspondence by stages in the offices of certain Heads of Departments and the scheme has since been extended to some other Heads of Departments also. Only the first stage of the scheme in which communications received in Tamil from private parties will be replied to in Tamil has been introduced in the first stage in those offices. The Government have now decided that the first stage of the Tamil scheme corresponding to the first stage of the scheme introduced in the offices of Heads of Departments should be introduced in the following Secretariat Departments also, viz. Rural Development and local Administration, Revenue, Education and Public Health, Public Works, Food, Agriculture, Home, Industries, Labour and Co-operation and Public Departments with effect from 1st May 1966. In the case of Law and Finance Departments the introduction of the Tamil Scheme be deferred indefinitely. The Legislative Assembly and Council Departments will be requested to introduce the Tamil Scheme in their offices by adapting it suitably. Formal orders, detailed instructions and the necessary notification under section 4 of the Official Language Act for introducting the scheme in the Departments of the Secretariat concerned will be issued at the appropriate time. The Secretary, Official Language Committee, Madras is requested to submit by about the 1st December 1965,

draft notification under section 4 of the Official Language Act for the introduction of the first stage of the scheme in the eight departments of the Secretariat mentioned above.

2.For the implementation of the scheme from 1.6.66 it is considered that each of the Secretariat Departments concerned should be provided with two Tamil typewriters. The two Tamil typewriters will be required in addition to the then existing number of English typewriters. It is the intention that each Tamil typist can handle his Tamil machine and also one English machine and that no additional typist need therefore be sanctioned when introducing the scheme. Necessary orders for the supply of Tamil typewriters to the Departments of Secretariat concerned at the appropriate time will be issued from the Public Works Department in due course.

3.It is considered that each of the Secretariat Departments concerned should initially have a minimum number of four typists trained in Tamil typewriting on the standard key-board (two for the two machines with two others provided for leave vacancies). As the further stages of the scheme are introduced additional number of typists trained in Tamil typewriting on the standard key-board will be required. The Government have therefore decided the training in Tamil typewriting on the standard key-board should be made compulsory for all Secretariat typists and Steno-typists who are below 45 years of age and are not qualified in Tamil typewriting on the standard key-board. The training will be for a period of six months at Government cost under the subsidy scheme sanctioned in G.O.Ms.No.402, Public (General-M), dated 15.3.60 and since extended upto 30.4.1965 in G.O.Ms.No.93, Public (General-M), dated 18.1.64. The English Typists doing the day to day fair copying work should have preference, for the training in Tamil typewriting, over steno-typists employed for shorthand work. Each of the eight departments concerned, in which the scheme has to be introduced are requested to depute for every half yearly session atleast two of its Typists for training

in Tamil Typewriting on the Standard Key-board at the most convenient, approved private institute in Madras city. The first batch should be deputed from 1st May 1964.

4. The Government have also decided to have with effect from 1.6.1964 instruction classes in Tamil on the basis of the general orders in G.O.Ms.No.2450, Public (General-M), dated 26.12.62 for the Secretariat officers and staff in the eight departments concerned who do not have adequate knowledge of Tamil and fall under the category of persons referred to in the G.O. and who have not attained 45 years of age. The Departments are requested to send the Secretary, Official Language Committee very urgently lists of officers and staff in their departments falling under the category referred to above who have to be trained in Tamil, giving the name and designation of the officer, his age at the time of report and the reasons why the training is necessary. The Secretary, Official Language committee is requested to send to the Government in the Public (General-M) Department proposals for helding instruction class or classes in Tamil from 1.6.1964 for the Secretariat officers and staff in the same manner as for similar staff in other offices in Madras City.

(By order of the Governor)

**S.K. CHETTUR**
Chief Secretary to Government

இணைப்பு - 21

**GOVERNMENT OF MADRAS**

PUBLIC (TAMIL DEVELOPMENT - I) DEPARTMENT

G.O. No.453, 24th February 1966.

Official Language - Tamil - Introduction in certain department of the Secretariat - First stage of Tamil Scheme - Notification - Issued.

Read the following papers :

G.O.Ms.No.537, Public (General - M), dated 21st March 1964.

From the Secretary, Official Language Committee, Ref.No.6881/65-A, dated 4th December 1965.

Order No.453, Public (Tamil Development-I), dated 24th February 1966.

The following notification will be published in the *Fort St. George Gazette:*

**NOTIFICATION**

In exercise of the powers ocnferred by section 4 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956), the Governor of Madras hereby directs that with effect on and from the first day of May 1966, Tamil shall be used in respect of all official communications from the departments of the Secretariat specified in the schedule below to any person other than,

i) An officer of a State Government or of the Central Government; and

ii) a local authority;

iii) a corporation or a company set up by a State Government under an Act of Legislature or under the Companies Act, 1956;

Provided that English may be used:

a) in communications to

i) firms and institutions which generally correspond in English;

ii) foreign Embassies, Consulates and persons belonging to foreign diplomatic services; and

iii) other foreigners;

b) in communications which are replies to letters received in English from other individuals; and

c) in communications relating to cases involving the exercise of statutory powers.

**SCHEDULE**

Serial number and name of the department.

1. Rural Development and Local Administration Department.
2. Revenue Department.
3. Education and Public Health Department
4. Public Works Department
5. Food Department.
6. Agriculture Department.
7. Home Department.
8. Industries, Labour and Co-operation Department.
9. Public Department.

(By order of the Governor)

**V. KARTHIKEYAN,**
Secretary to Government

இணைப்பு - 22

**தமிழக அரசு**

சுருக்கம

ஆட்சிமொழி - தமிழ் - தலைமைச் செயலகத் துறைகளில் தொடங்கல் பொது (செய்தி விளம்பரத்) துறை - கடிதப் போக்குவரவு - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

பொது (தமிழ் வளர்ச்சி-1)த் துறை

அரச ஆணை (நிலை) எண். 2010 நாள் 11.9.1967.

பார்வை

1. அரசு ஆணை (நிலை) எண்.537 பொது (பல்பொறுப்பு-எம்), நாள் 21.3.1964.
2. அரசு ஆணை (நிலை) எண்.453, பொது (தமிழ் வளர்ச்சி-1), நாள் 24.2.1967.

**ஆணை**

துறைத் தலைவர்களின் அலுவலகங்களில் தொடங்கியுள்ள திட்டத்தின் முதனிலைக்கு ஈடான தமிழ்த் திட்டத்தின் முதனிலையை 1.5.66 முதல் தமிழக அரசு தலைமைச் செயலகத் துறைகளில் தொடங்குவதென்னும் முடிவை மேலே முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ள ஆணையில் அரசு அறிவித்தது. இம்முடிவிற்கேற்ப, மேலே இரண்டாவதாகக் குறிக்கப்பட்டுள்ள ஆணையில் தலைமைச் செயலகத்திலுள்ள நிதி, சட்டம், சட்டமன்றம் ஆகிய துறைகள் நீங்கலாக உள்ள பிற துறைகளில் தமிழ்த் திட்டத்தின் முதனிலையை 1.5.66 முதல் தொடங்குவதற்கான சட்ட அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. இம்முதனிலையின்படி பொதுமக்களிடமிருந்து தமிழில் வருகின்ற கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் அனுப்பப் பெறும்.

2. தலைமைச் செயலகத் துறைகளில் தமிழ்த் திட்டத்தின் செயல்முறை வேகத்தை அதிகரிக்கும் கருதவதை அரசு ஆய்ந்து, தலைமைச் செயலகத்திலுள்ள பொது (செய்தி-விளம்பரத்) துறையில் எல்லா அலுவல்களும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கின்றது. ஆயினும் கீழ்க்கண்ட இனங்களுக்கு ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்பெறும்:

1. சம்பளப் பட்டி, சில்லறைச் செலவுப் பட்டி, பயணப்படிப் பட்டி, பயிற்சி உதவிப்பணப் பட்டி ஆகியவை தயாரித்தலிலும், கருவூலங்களுக்கும் சென்னையிலுள்ள மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சம்பளக் கணக்கு அலுவலர் ஆகியோருக்கு அனுப்பப்படும் கடிதங்களிலும் ;
2. கிராம நீதிமன்றங்கள் தவிர்த்த பிற நீதிமன்றங்களுக்கும், மத்திய அரசு அலுவலகங்களுக்கும், பிற மாநில அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பப்படும் எல்லாக் கடிதங்களிலும்
3. மேல் முறையீடு, மறு ஆய்வு ஆகியவற்றிற்கு இடந்தரும் சட்டபூர்வமான எல்லா ஆணைகளிலும்;

4. அயல்நாட்டுத் தூதரகங்களுக்கும், துணைத் தூதரகங்களுக்கும், அயல்நாட்டுத் தொடர்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், பிற அயல்நாட்டினர்களுக்கும் எழுதப்படும் கடிதங்களிலும்

(ஆளுநர் ஆணைப்படி)

**சி.ஏ. இராமகிருஷ்ணன்**
அரசுத் தலைமைச் செயலாளர்

**இணைப்பு - 23**

## தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆட்சிமொழி - தமிழ் - செயலகத் துறைகளில் தமிழ்த் திட்டம் விரைவுபடுத்த ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பொது (தமிழ் வளர்ச்சி-1)த் துறை

அரசாணை நிலை எண்.1609 நாள் 2.8.1968.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 557, பொதுத் (பல்பொறுப்பு-எம்) துறை, நாள் 21.3.1964.
2. அரசாணை நிலை என். 453, பொதுத் (பல்பொறுப்பு - எம்) துறை,நாள் 24.2 1966.
3. அரசாணை நிலை எண்.1993, பொதுத் (தமிழ் வளர்ச்சி பிரிவு-1) துறை, நாள் 28 8.1967.
4. அரசாணை நிலை எண்.2010, பொதுத் (தமிழ் வளர்ச்சி பிரிவு - 1) துறை, நாள் 11 9 1967.
5. ஆட்சிமொழிக் குழுச் செயலாளரது கடிதம் எண்.1596/69/அ, நாள் 3.4.1968.

**ஆணை**

துறைத் தலைவர்களின் அலுவலகங்களில் தொடங்கியுள்ள ஆட்சிமொழித் திட்டத்தின் முதனிலையைப் போலவே தமிழக அரசுத் தலைமைச் செயலகத் துறைகளிலும் ஆட்சிமொழித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்னும் முடிவை மேலே குறிக்கப்பட்டுள்ள ஆணையில் அரசு அறிவித்தது. இம்முடிவிற்கு ஏற்ப, மேலே இரண்டாவதாகக் குறிக்கப்பட்டுள்ள ஆணையில் தலைமைச்

செயலகத்திலுள்ள நிதி, சட்டம், சட்டமன்றம் ஆகிய துறைகள் நீங்கலாக உள்ள பிற துறைகளில் தமிழ்த் திட்டத்தின் முதனிலையை 1.5.1966 முதல் தொடங்குவதற்கான சட்ட அறிக்கையொன்று வெளியிடப் பட்டுள்ளது. இம்முதனிலையின்படி பொதுமக்களிடமிருந்து தமிழில் வருகின்ற கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் அனுப்பப்பெறும்.

2. மேலே மூன்றாவது, நான்காவதாகக் குறிக்கப்பட்டுள்ள ஆணைகளில் தலைமைச் செயலகத்திலுள்ள தமிழ் வளர்ச்சித் துறையிலும், செய்தி விளம்பரத் துறையிலும் தமிழ்த் திட்டத்தை முழு அளவில் நிறைவேற்றி வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளன.

3. நிதி, சட்டம், சட்டமன்றம் ஆகிய துறைகள் நீங்கலாக உள்ள தலைமைச் செயலகத் துறைகளில் ஆட்சிமொழித் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு ஆட்சிமொழிக் குழு கீழ்க்கண்ட கருத்துக்களை வழங்கியுள்ளது:

அ. பொதுமக்களிடமிருந்து தமிழில் கடிதங்கள் வரின் அவற்றிற்குத் தமிழிலேயே பதில் எழுதுவதுமல்லாமல் அவைபற்றிய குறிப்புகள் யாவும் தமிழிலேயே இருக்க வேண்டும்.

ஆ. எல்லாத் துறைகளிலுமே சில குறிப்பிட்ட பொருள்களில் உள்ளூராட்சி அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோர்களோடு தமிழிலேயே கடிதப் போக்குவரவு நடத்தவேண்டும்.

ஆட்சிமொழிக் குழுவின் மேற்கண்ட கருத்துகளை அரசு ஏற்றுக் கொள்கிறது.

4. மேலே பத்தி 3இல் கண்டுள்ள உத்தரவுகளைத் தங்கள் துறைகளில் செம்மையாகச் செயற்படுத்துமாறு அரசுச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அந்தப் பத்தியில் உள்ள இரண்டாவது இனத்தைப் பொறுத்தவரையில் இரண்டு மாத கால அளவிற்குள் பொருள்களைக் குறிப்பிட்டு இத்துறைக்கு அனுப்புமாறும் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநர் ஆணைப்படி)

**என். கிருஷ்ணசாமி,**
அரசுச் செயலாளர்

இணைப்பு - 24

Copy of G.O.Ms.No.3148, 27th December 1969 of Public (Tamil Developmentl) Department

---

## ABSTRACT

Official language - Tamil - Introduction in Departments of Secretariat - Further Orders - Issued

Read the following papers :-

1. G.O.Ms.No. 453, Public (T.D.I), dated 24.2.66.
2. G.O.Ms.No.1893, Public (T.D.I), dated 28.8.67.
3. G.O.Ms.No.2010, Public (T.D.I), dated 11.9.67.
4. G.O.Ms.No.1609, Public (T.D.I.), dated 2.8.68.

**ORDER**

In the departments of the Secretariat excluding Law, Finance, Legislative Assembly and Legislative Council the first stage of the Tamil Scheme was introduced with effect from 1st May 1966. In the Government orders second and third read above the full Tamil scheme was implemented in the Tamil Development and information and publicity Departments of the Secretariat. In the Government order fourth read above, the Tamil scheme in the Departments of the Secretariat was further expanded. It was ordered that in addition to sending replies in Tamil to the communications received in Tamil, the entire noting in such cases should also be written in Tamil. The Departments of the Secretariat were further informed that they should themselves select a few specified subjects and correspond in Tamil with the officials of the local bodies, District Collectors and Heads of Departments in these subjects. Government have reviewed the progress achieved since the scheme was introduced and have considered carefully what further steps should be taken

to accelerate the progress of switch over to Tamil over as wide a field as possible.

2. In the light of the Resolution of the State Legislative, dated 23rd January 1962 on the Language issue, Tamil has to be brought into use as the official language in all Government Departments within a period of five years. The speedy and more extensive implementation of the Tamil Scheme in the Departments of the Secretariat will this be only in furtherance of the Language Policy of the Government. This would also enthuse and encourage all Government Departments and also serve as an example to them. In consideration of all these factors, the Government direct that in all the Departments of the Secretariat excluding Law, Finance, Legislative Assembly and Legislative Council Departments. Tamil shall be used for the following purposes with effect from the date of this order.

1. All matters relating to establishment, such as casual leave, earned leave, transfer and postings, tour programmes, etc. and issue of ordrs on these subjects, maintenance of all registers;

2. Notes, drafts and orders on letters received from the Heads of Departments, Collectors and the Officers of the Local Bodies.

Notes : Whenever it is found not possible to get at an apt, Tamil word for certain English words in the course of noting and drafting in Tamil, the ideas in such places may be conveyed by using the relevant English words themselves to save time.

3. Government also direct that English shall continue to be used:

i) In the preparation of pay bills, contingent bills, travelling allowance bills, stipend bills and all other communications bearing financial implication,

including letters addressed to the A.G., Madras Pay and Accounts Officer, Director of Treasuries and Accounts, Treasury officers and the like.

ii) While corresponding with the Courts other than Village Courts and matters relating to legal highly technical subjects.

iii) While corresponding with other State Government and Central Government Offices.

iv) In statutory orders which are subject to appeal to Courts, and

v) While corresponding with Foreign Embassies, Consulates and persons belonging to foreign diplomatic mission and other foreigners.

(By order of the Governor)

**E.P. ROYAPPA**
Chief Secretary to Government.

இணைப்பு - 25

**GOVERNMENT OF TAMILNADU**

ABSTRACT.

Official language - Tamil - Introduction in Law and Finance Departments of the Secretariat and implementation of first stage - Orders issued.

PUBLIC (TAMIL DEVELOPMENT - I) DEPARTMENT

G.O.Ms.No.517 Dated the 9th March 1970.

Read : G.O.Ms.No.453, Public (Tamil Development - I) Department, dated 24.2.1966.

**ORDER**

In Accordance with the notification issued in the G.O. read above, the first stage of the Tamil scheme was introduced with effect from 1.5.66 in all Departments of the Secretariat except law, Finance and Legislature. Subsequent to this, the full Tamil scheme has been implemented in the Public (Tamil Development) Information and Publicity department and some other branches of the Public Department.

2. A Meeting was held on 14.10.1969 in the chambers of the Chief Secretary to Government to devise necessary measures to expedite the implementation of the Tamil scheme in the departments of the Secretariat. At the meeting it was decided among other things that the first stage of the Tamil scheme might be introduced in the Law and Finance Departments. The Government accordingly direct that the above two departments may also be notified under the Official Language Act, 1956 and that the first stage of the Tamil scheme under which communications received in Tamil will have to be replied to in Tamil should be implemented with effect from 1.4.1970. The subsequent stages of the scheme will however be introduced in these departments in due course by the issue of executive orders.

3. The Government also direct that the Superintendents, Assistants, Junior Assistants and the Typists in the law and Finance Departments may also be given training in noting and drafting in Tamil as was given to the staff in the other departments of the Secretariat. The Secretary, Official Language Committee is requesting to take action and submit necessary proposals to Government for conducting training classes in this regard.

4. The following notification will be published in the *Fort St. George Gazette:*

**NOTIFICATION**

In exercise of the powers conferred by section 4 of the Tamil Nadu official language Act, 1956 (Tamil Nadu Act XXXIX of 1956) the Government of Tamil Nadu hereby directs that with effect on

and from the 1st April of 1970 Tamil shall be used in respect of all official communications from the Finance and Law Departments of the Secretariat to any person other than.

1. an officer of a State Government or of the Central Government;
2. a local authority, and
3. a corporation or a company set up by a State Government under an Act of Legislature or under the Companies Act, 1956.

Provided that English may be used.

a) in communications to

- i) firms and Institutions which generally correspond in English;
- ii) foreign Embassies, Consulates and persons belonging to foreign diplomatic services; and
- iii) other foreigners:
  - b) in communication which are replies to letters received in English from other individuals; and
  - c) in communications relating to cases involving the exercise of statutory powers.

(By order of the Governor)

**S.KRISHNASWAMI,**
Secretary to Government.

இணைப்பு - 26

**தமிழ்நாடு அரசு**

பொருட் சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - தமிழ் வளர்ச்சி இயக்ககம் - ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தின் முனைப்புத் திட்டத்தைத் தலைமைச் செயலகத் துறைகள், மாநகராட்சிகள், அரசு சார் நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், கூட்டுறவு இணையங்கள் போன்ற அனைத்திலும் விரிவுபடுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை

அரசாணை நிலை எண்.371 நாள் 31.10.1986
தி.ஆ. 2017, அட்சய, ஐப்பசி 15.

பார்வை :

1. அரசு ஆணை நிலை எண்.2070, கல்வித்துறை. நாள் 2.12.71
2. அரசு ஆணை நிலை எண்.432, கல்வித்துறை, நாள் 10.3.81.
3. கல்வித்துறை கடிதம் எண்.13050/தவ1/81-1, நாள். 2.6.81.
4. அரசு ஆணை நிலை எண்.968 கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள்.21.5.82.
5. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.இ2/17386/82, நாள் 24.12.82.

**ஆணை**

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டம் செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றப்பட மூவாண்டு ஆட்சிமொழி முனைப்புத் திட்டம் 1.4.81 முதல் ஐந்து அரசுத் துறைகளில் முதலாண்டில் செயல்படுத்த 10.3.81 ஆம் நாளிட்ட கல்வித் துறையின் அரசாணை நிலை எண். 432இல் ஆணையிடப்பட்டது. மேலும் பனிரெண்டு அரசுத் துறைகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த 2.6.81ஆம் நாளிட்ட கல்வித் துறையின் அரசுக் கடிதம் எண்.43050/தவ1/81-1இல் ஆணையிடப் பட்டது. அரசு ஆணை நிலை எண்.968 கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 21.51.82இல் அனைத்து அரசுத் துறைகளிலும் ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டத்தை 1.4.82 முதல் விரிவுபடுத்தி ஆணையிட்டுள்ளது.

2. தற்பொழுது தமிழ் வளர்ச்சி இயக்குநர் தலைமைச் செயலகத் துறைகளும், மாநகராட்சிகளும் அரசின் சார்பு நிறுவனங்கள் பலவும் அரசுத் துறைகளோடு தொடர்ந்து ஆங்கிலத்திலேயே கடிதத் தொடர்பு கொண்டு வருகிறது என்றும்.எனவே, தலைமைச் செயலகம், அரசின் துறைகள், சார்பு நிறுவனங்கள், மாநகராட்சிகள், வாரியங்கள், கழகங்கள், கூட்டுறவு இணையங்கள் அனைத்திலும் தமிழ்த் திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டத்தை விரிவுபடுத்திட அரசுக்குக் கருத்துரு அளித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்தினை ஏற்று ஆட்சிமொழி முனைப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் பொருட்டு, தலைமைச் செயலகத் துறைகளிலும், அரசு சார்பு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், கூட்டுறவு இணையங்கள் போன்ற அனைத்திலும் தமிழ்த் திட்டத்தை

உடனடியாகச் செயற்படுத்திட கீழ்க்காணும் வகையில் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

அ. வெளியிடப்படும் கடிதங்கள், அலுவல் சார்பற்ற குறிப்புகள், அலுவலக ஆணைகள், அரசாணைகள் மற்றும் இதர கடிதப் போக்குவரத்துகள் ஆகியவை அரசாணை நிலை எண்.2070, கல்வித்துறை, நாள் 2.12.71இல் அறிவிக்கப்பட்டவாறு விலக்களிக்கப்பட்ட இனங்களைத் தவிர பிற எல்லா இனங்களிலும் தமிழில்தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**ஆ. கடிதப் போக்குவரத்து மற்றம் இதர குறிப்புகள்**

கடிதப் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் ஆங்கிலத்தில் ஒரு கடித வரைவினை எழுத வேண்டுவது இன்றியமையாததென்று கருதப்பட்டால் பொறுப்புள்ள ஒரு அலுவலரின் அனுமதியின்றி அதனை ஆங்கிலத்தில் எழுதக்கூடாது எனவும் அவ்வரைவு விதிவிலக்குப் பெற்ற இனத்தைச் சேர்ந்ததா என்பதை ஆராய்ந்த அந்த அலுவலர் அனுமதித்த பின்னரே ஆங்கில வரைவுகள் எழுதப்படலாம். இதைத் தவிர சுற்றாணைக் குறிப்புகள், குறிப்புக் கோப்பின் குறிப்புகள், நினைவூட்டுகள், ஒப்பளிப்புக் கடிதங்கள், இடைக்கால மறுமொழிகள், அசல் திருப்புகை முடிவுகள், அலுவல் சார்பற்ற குறிப்பாணை ஆகிய வரைவுகளுக்கும் தமிழையே பயன்படுத்த வேண்டும். ஆங்கிலத்தை அறவே தவிர்த்திட வேண்டும்.

**இ. பதிவேடுகள் பேணுவது :**

பொதுவாகப் பதிவேடுகள் அனைத்தும் தமிழிலேயே பேணப்படலாம். அவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்படவில்லை மாநிலக் கணக்காய்வாளரால் கணக்குத் தணிக்கைக்கு உட்பட்ட சில பதிவேடுகளில் மட்டும் ஆங்கிலம் பயன்படுத்தப்படலாம். இதைத் தவிர இதுவரையில் ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டு வந்த பதிவேடுகளை உடனடியாகத் தமிழுக்கு மாற்றலாம்

**ஈ. ஆய்வு :**

தமிழ் வளர்ச்சி இயக்குநர் இதுவரை துறைத் தலைமை அலுவலகங்களிலும், மாவட்டாட்சியர் அலுவலகங்களிலும் சில சார்நிலை அலுவலகங்களிலும் தமிழ்த் திட்டச் செயற்பாடு அளவு குறித்த ஆய்வு செய்து வருகின்றார் அவ்வாய்வுப் பணி இனி தலைமைச் செயலகத் துறைகளிலும் அரசு சார்பு நிறுவனங்கள், வாரியங்கள், அரசு கழகங்கள் போன்ற அனைத்திலும் மேற்கொள்ளலாம் தலைமை அலுவலகங்களில் தமிழ் வளர்ச்சி இயக்குநரும் அவற்றின் சார்நிலை அலுவலகங்களில் மாவட்டத் தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்களும் ஆய்வுப்பணி மேற்கொள்ளலாம் தலைமைச் செயலகத்தைப் பொறுத்தமட்டில் தமிழை பயன்படுத்திட முனைப்பு முன்னேற்றம் குறித்து ஆய்வு

செய்ய இந்திய ஆட்சிப்பணி (ஐ.ஏ.எஸ்) நிலையில் உள்ள முதுநிலை உயர் அலுவலர் ஒருவரை அவ்வப்போது நியமனம் செய்து அவர் தம் மற்ற பணிகளுடன் இவ்வாய்வுப் பணியையும் மேற்கொள்ளலாம். இந்த ஆய்வறிக்கையின் நகல்கள் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும் குறிக்கப்படலாம். இதன் தொடர்பான உரிய மேல் நடவடிக்கைகள் பொதுத்துறை மற்றும் பணியாளர் நிர்வாகச் சீர்திருத்த (ஆய்வுத்) துறை மேற்கொள்ளலாம். தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்களின் ஆய்வறிக்கைகள் ஆயப்படும் அச்சார்நிலை நிறுவனங்கள் அதன் தலைமை அலுவலகங்களுக்கும் அதன் நகல் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும் தவறாமல் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ஆய்விற்குப் பின் நகல் தொடர்புடைய தலைமைச் செயலகத் தலைமைத் துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும். அரசின் சீரிய இத்திட்டத்தினை முனைந்து செவ்வனே நிறைவேற்றிட சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் ஆவன செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. மேற்குறிப்பிட்டவாறு தமிழ்த் திட்டச் செயற்பாடானது இவ்வாணை வெளியிடும் நாளிலிருந்து உடனடியாக தலைமைச் செயலகம், அரச சார்பு நிறுவனங்கள், வாரியங்கள், அரசுக் கழகங்கள், கூட்டுறவு இணையங்கள், போன்ற அனைத்து நிறுவனங்களிலும் உடனடி நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது எனவும், இத்திட்டம் இவ்வலுவலகங்களில் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, அவ்வாறு நிறைவேற்றியமைக்கான அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் முதல் வாரத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும் அரசிற்கும் தவறாது அனுப்பப்பட வேண்டும் என்றும் அனைத்துத் துறை நிர்வாக அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இம்முனைப்புத் திட்டத்தில் செயலாகத்தின் பொறுப்பு அந்த நிர்வாகத் தலைவர்களையே முற்றிலுமாகச் சாரும் என்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

(ஒம்.) **ஏ.கே. விஜயபானு,**
அரசு செயலாளர்(பொ.)

**இணைப்பு - 27**

## தமிழ்நாடு அரசு

பொருட் சுருக்கம்

ஆட்சிமொழி - தலைமைச் செயலகம் - அரசாணைகள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட வேண்டிய நேர்வுகளில் தமிழாக்கத்தினையும் வெளியிடல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் (தவ1-1)துறை

அரசாணை நிலை எண்.182 நாள்.27.6.1989

திருவள்ளுவராண்டு 2020
சுக்கில, ஆனி 13.

படிக்கவும் :

1. அரசாணை (நிலை) எண்.1609 பொது (தவ1)த் துறை, நாள் 2.6.1968.
2. அரசாணை (நிலை) எண் 517, பொது (தவ1)த் துறை, நாள் 9.3.1970.
3. அரசாணை (நிலை) எண்.2070, கல்வி(தவ)த் துறை, நாள் 2.12.1971.
4. அரசாணை (நிலை) எண்.371, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் 31.10.1986.

**ஆணை**

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத் துறைகள் வெளியிடும் அரசாணைகள் தற்போது ஆங்கிலத்தில் வெளியிடும் வழக்கம் உள்ளது. அரசின் ஆணைகள் மற்றும் கடிதப் போக்குவரத்து ஆகியவை அரசாணை (நிலை) எண்.2070 கல்வித்துறை, நாள் 2.12 71இல் அறிவிக்கப்பட்ட வாறு விலக்களிக்கப்பட்ட இனங்களைத் தவிர பிற அனைத்து இனங்களிலும் தமிழில்தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மேலே ப(4)இல் குறித்த அரசாணையில் ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

2. சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்படும் விதிகள், விதிமுறைகள், ஆணைகள் மற்றும் விதிவிலக்கினங்கள் தவிர ஏனைய ஆணைகள் தமிழிலேயே பிறப்பிக்கப்பட வேண்டும். சட்டத்தின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் ஆணைகள், விதிகள், விதிமுறைகள், துணை விதிகளைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் தொடர்ந்து ஆணைகள் வெளியிடப்படலாம். எனினும் அவ்வாறான நேர்வுகளில் ஆங்கிலத்துடன் தமிழுக்கும் நிகர்நிலை தந்து அவ்வாணைகளின்

தமிழாக்கம் கூடிய விரைவில் வெளியிடப்பெற வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

3. மேற்குறித்த ஆணைகளுக்கிணங்க தலைமைச் செயலகத் துறைகள் ஆங்கிலத்தில் ஆணைகள் வெளியிடும் நேர்வுகளில் இனி தமிழிலும் ஆணைகள் வெளியிட வேண்டும். இவ்வாறு வெளியிடப்படுவதைத் தொடர்புடைய அரசுத் துறைச் செயலாளர்கள் முழுமையாகக் கண்காணிக்க வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம்.எம். இராசேந்திரன்**
தலைமைச் செயலர்.

**இணைப்பு - 28**

**GOVERNMENT OF MADRAS**

ABSTRACT

Official language - Tamil - Glossary of Administrative Terms - Approved - Printing and Supply of copies - Ordered.

---

PUBLIC (GENERAL-M) DEPARTMENT

G.O.Ms.No.2057 Dated 3rd July 1957

Read

Letter from the Chairman, Official Language Act implementation Committee, Ref. No. W.18/57, dated 4th June 1957.

**ORDER**

The Government approve the Glossary of Administrative terms in Tamil prepared by the Official Language Act Implementation Committee.

2. The Government also accept the recommendation of the Committee that the Glossary be printed and supplied to all drafting clerks (i.e. Clerks who have noting and drafting

work) and section heads in all Government offices. When spare copies of the Glossary become available, they will be distributed to the Heads of offices by the Secretary of the Official Language Act Implementation Committee.

3. It is likely that actual experience might indicate the need for improving the glossary. Suggestion if any, for additions or alterations to the glossary may therefore be sent to the Chairman of the Committee any time within a period of six months from the date of receipt of the glossary.

(By order of the Governor)

**M.V. SUBRAMANIAN**
Chief Secretary to Government

இணைப்பு - 29

**GOVERNMENT OF TAMILNADU**

ABSTRACT

Indian Administrative Service - Assistant Collectors - Scheme of training - Revised orders - Issued

---

PUBLIC (SPECIAL - A) DEPARTMENT

G.O.Ms.No.1731 Dated the 26th August 1968

Read :

G.O.Ms.No.1329, Public (Special), dated 7.6.1962.

**ORDER**

Dr.D.C. Potter, an American Scholar who was some time with the Indian Institute of Public Administration, New Delhi, had conducted a study on the departmental training of Indian Administrative service officers in the States during the probationery period. He had also forwarded a copy of the model programme of training for Assistant Collectors drafted

by him, for adoption in this State with necessary alternations to suit the local circumstances. The Government have carefully considered the above model programme of training drafted by Dr. D.C. Potter in consultation with the Board of Revenue, Madras and the Secretaries to Government. As the detailed programme of training drafted by him was broadly based on the existing programme of training for Indian Administrative Service Offices in this state, the Government considered that the action called for in his report is only marginal. However in view of the recent developments that have taken place in the Administrative sphere, the Government have decided that a period of training in the following Departments and Offices is very essential for Assistant Collectors:

(1) Commercial Taxes Department

(2) Transport Department

(3) Office of the Commissioner of Labour

(4) Office of the Board of Revenue, and

(5) in Secretariat

As the Government do not considerate desirable to extend the total period of training beyond 54 weeks, they have decided to include the above items of training in the training programme of Assistant Collectors by suitably reducting the period of Training in certain items of the existing programme of training. They have, therefore revised the entire programme of training mentioned in the annexure to the G.O. read above and the revised programme of training is annexed to this order. The Government direct that in future, I.A.S. Assistant Collectors of this State should be given training as per the programme annexed to this order.

2. The Government also consider that the scope of the magisterial training imparted to the Assistant Collector should be much wider than at present. They have therefore

decided in consultation with the High Court that the Magisterial training for the Assistant Collectors should in future be on the following lines :

During the entire period of 54 weeks training of the District Magistrate (Judicial) should keep in continuous touch with the Assistant Collector and also send for him and give him suitable instructions regarding questions arising out of remarks on calenders. Consistent with the other items of training of the Assistant Collector, the District Magistrate (Judicial) should give opportunitis to the Assistant Collector from time to time, to sit with him or any other Subdivisional Magistrate in the Court and watch the proceedings in the Court. The idea is that during the entire 54 weeks of training, the District Magistrate (Judicial) should fix time for the Assistant Collector to sit in the Court at least for one day in a month and for about two or three hours in each such day, instead of confining his contact just for one week during training with District Magistrate (Judicial) formerly prescribed.

The above procedure for imparting magisterial training to the Assistant Collectors should be adopted in addition to the Magisterial training referred to in item 9 of the programme of training annexed to this Order.

The revised programme of training shall be deemed to have come into effect from the 10th Jully, 1968.

(By order of the Governor)

**C.A.RAMAKRISHNAN**
Chief Secretary to Goverment.

## ANNEXURE

Revised programme of Training for I.A.S, Assistant Collectors:

| | | |
|---|---|---|
| 1. | Work with the Collector | 2 Weeks |
| 2. | Training in Revenue Records and Registration and Advanced Survey | 2 Weeks |
| 3. | Training with the Karnam including the training with the Panchayat President | 3 Weeks |
| 4. | Training with and as a Revenue Inspector (The training should include four days with the Exective Officer of a Town Panchayat and a week with a Grama Sevak). | 4 Weeks |
| 5. | Training with the Tahsildar | 4 Weeks |
| 6. | Training with the Panchayat Union Commissioner (The training should include training in Panchayat Audit and with all Extension Officers) | 4 Weeks |
| 7. | Training with the Assistant Engineers (Highways and rural works). The training will include training in respect of all rural works including minor irrigation). | 2 Weeks |
| 8. | Training with- | |
| | (a) Revenue Divisional Officer | 4 Weeks |
| | (b) Divisional Panchayat Officer (The two items of training to be in the same division). | 2 Weeks |
| | (c) Regional Transport Officer | 1 Week |
| 9. | Training with the District Magistrate (Judicial) | 1 Week |

| | | |
|---|---|---|
| 10. | Treasury training | 2 Weeks |
| 11. | Settlement training | 2 Weeks |
| 12. | Training with Executive Engineer | 1 Week |
| 13. | Training with Commercial Tax Officer | 1 Week |
| 14. | Training with Collector's Office | 4 Weeks |
| 15. | Training with the Superintendent of Police | 1 Week |
| 16. | Training with the District Forest Officer | 1 Week |
| 17. | Training with the District Agriculiural Officer | 1 Week |
| 18. | Training with the Deputy Registrar of Co-operative Societies | 1 Week |
| 19. | * Full charge as Panchayat Union Commissioner | 4 Weeks |
| 20. | * Holding charge of a taluk as Revenue Divisonal Officer under the general control of the Revenue Divisional Officer | 4 Weeks |
| 21. | * Training with Commissioner of Labour (To study Industrial relations and Labour Laws) | 1 Week |
| 22. | Training in Board of Revenue | 1 Week |
| 23. | Training with the Selected Deputy Secretaries to Government | 1 Week |
| | | 54 weeks |

(*these items have been rearranged vide G.o.Ms.No.857, dated 3.5.1969)

## இணைப்பு - 30

அரசாணை நிலை எண் 110,கல்வி (தமிழ்)த் துறை, 22.1.1974 நாளிட்ட கடித நகல்.

பொருட் சுருக்கம்

ஆட்சிமொழி- தமிழ் - இளநிலை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அலுவலர்களுக்கு தமிழ்த் திட்டப் பயிற்சி அளிப்பது - கருத்துரு - ஆணை - வெளியிடப்படுகிறது

பார்வை :

1. ஆட்சிமொழிக் குழு செயலாளரின் கடிதம் எண் 1096/70, நாள் 3.3.70.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண் ஆ3/9622/72, நாள் 30.3.73.

**ஆணை**

தமிழ்த் திட்டம் அலுவலகங்களில் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு அடிப்படையாக அலுவலகத் தலைவர்கள் தமிழில் அலுவலக நடைமுறையை எளிதாகப் பின்பற்றத் தக்க பயிற்சி அளிக்கும் திட்டம் ஏற்படுத்தலாம் என்று முன்னர் ஆட்சிமொழிக் குழுக் கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 4 வார பயிற்சிக்கான திட்டம் ஒன்று முன்னாள் ஆட்சிமொழிக் குழுச் செயலாளரால் அனுப்பப்பட்டது.

2. இளநிலை ஐ.ஏ.எஸ்.,ஐ.பி.எஸ்., அலுவலர்களுக்கு அனைந்திந்திய முறையில் 54 வார நிருவாகப் பயிற்சி அளிக்கப் படுகிறது. இந்த 54 வார காலப் பயிற்சிக்குள்ளாக தமிழ்த் திட்டப் பயிற்சி 4 வார காலத்திற்கு இருப்பது ஆயப்பட்டு பல காரணங்களால் கைவிடப்பட்டது. ஆனால் இப்பயிற்சியினை குறுகிய கால ஒரு வார பயிற்சித் திட்டமாக நிறைவேற்றலாம் என்ற எண்ணத்தில் இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி உள்ள பயிற்சி திட்டம் பின்வருமாறு:

3. ஒரு வார பயிற்சிநிலை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அலுவலர் பணியில் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் முடிந்த பின்பு முறையே கோட்டாட்சித் தலைவராகவோ (Assistant Collector) கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளராகவோ (Assistant Superintendent of Police) பணியாற்றத் தொடங்கிய மூன்று திங்கள் காலத்திற்குள் தமிழ்த் திட்டப் பயிற்சியில் ஒரு வார பயிற்சி அளிக்கவேண்டும். இப்பயிற்சியை சென்னையில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் அளிப்பார். இப்பயிற்சி பற்றிய விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கா. திரவியம்,**
அரசுச் செயலர்.

## இணைப்பு

| | | |
|---|---|---|
| முதல் நாள் | : | ஆட்சிமொழிச் சட்டம், அதன் வரையறைகள், சட்டத்தைச் செயற்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், தமிழ்த் தட்டச்சு, தமிழ்த் தட்டச்சுப் பயிற்சி, தட்டச்சர் பற்றிய விதிமுறைகள். |
| இரண்டாம் நாள் | : | மொழிபெயர்ப்புப் பற்றி- சொல்லகராதிகள் தயாரிப்பு, விதிகள், நிதித் தொகுப்புகள் பல்வேறு துறைகளில் சிறப்புச் சொற்கள் துணையகராதி களைப் பற்றி அறிதல். அரசுப் பணியிடங்கள் தமிழ்மொழித் தகுதி பெற்றிருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை, அரசு அலுவலகங்களில் தமிழ்த் திட்டம் படிப்படியாக செயற்படுத்தப்பட்ட நிலைகள் குறித்து தன்னுரிமையுடன் செயற்படும் அரசு நிறுவனங்களிலும் ஆட்சிமொழியைச் செயற்படுத்தும் முறை பற்றியும் அறிதல். |
| மூன்றாம் நாள் | : | அரசு வெளியிட்டுள்ள ஆணைகளின்படி அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழியைச் செயற்படுத்தும் பொறுப்பும், கடமையும் அலுவலகத் தலைவர் என்னும் முறையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தமிழ்த் திட்டச் செயற்பாடு குறித்து ஆய்வு முறைகளும் அவற்றில் அலுவலகத் தலைவரின் பொறுப்பும். |
| நான்காம் நாள் | : | விண்ணப்பம், குறிப்பாணை, அரசாணை மற்றும் அலுவலக நடவடிக்கைகள் குறித்த தமிழ், ஆங்கில மாதிரிக் கடிதங்களைப் பற்றி அறிந்து கொள்ளல். |
| ஐந்தாம் நாள் | | ஆட்சிமொழிச் சட்டம் அதன் செயலாக்கம் குறித்து கல்வித் துறை அரசுச் செயலர் அவர்களுடன் கலந்துரையாடல். |
| ஆறாம் நாள் | : | ஆட்சிமொழிச் சட்டம் அதன் செயலாக்கம் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடல். |

இணைப்பு - 31

## GOVERNMENT OF MADRAS

## ABSTRACT

Indian administrative Service/ Indian Police Service - Proficiency in regional language of State, viz, Tamil Encouragement to All India Service Officers to attain proficiency - Grant of monetary awards - Suggestion of Government of India - Accepted - Orders issued.

---

PUBLIC (SPECIAL) DEPARTMENT

G.o.MG. No.2422 Dated 17th November 1967.

Read the following :-

1) From the Government of India, Ministry of Home Affairs, Letter No.4/43/66 AIS (PII), dated 9th November 1966.

2) From the Secretary, Madras Public Service Commission, Letter No.2498 A1/67-1, dated 8th June 1967 and dated 16.9.67.

**ORDER**

The Government of India have suggested that in order to give an additional incentive to the officers of the All India Services (Whose mother tongue is not the regional language) to attain fairly high proficiency in the regional language of the State, a scheme of institution of special awards may be set up by the State Govt. in respect of officers of the All India Services who attain such high proficiency and that those awards may be of the order of Rupees 1000/- (Rupees one thousand only) each and may be made available for the officers for the maximum period of five years affter the probationers join the State. They have also suggested that the State Government may work out the details in consultation with the State Public Service Commission who conduct the departmental examinations in the Regional language.

2. The Government after a careful consideration, have decided to accept the suggestion of the Government of India that All India Service Officers whose mother tongue is not Tamil should be encouraged to attain a high proficiency in the Regional Language of the State, (viz) Tamil. Government have examined in consultation with the Tamil Nadu Public Service Commission the question of fixing a suitable standard of proficiency in Tamil for eligibility for the grant of above award. The Tamil Nadu Public Service Commission has suggested that it would be quite sufficient to fix S.S.L.C. Standard as the standard of proficiency to be attained by officers to qualify themselves for the award and it has also suggested a draft syallabus for the reward examination which contains tests both written and oral. The Government have agreed with the Tamil Nadu Public Service Commission and accepted the draft syllabus drafted with some minor alterations. The draft syllabus for the above said examination and other relevant instructions in regard to the conduct of the examination are given in the annexure to this order.

3. The Government direct that every member of the Indian Administrative Service/Indian Police Service of this State cadre whose mother tongue is not Tamil, and who passes proficiency test in Tamil subject to the terms and conditions referred to in the annexure to this order shall be entitled to a monetary award of Rs.1,000/-(Rupees one thousand only).

4. Orders sanctioning such awards in individual cases will be issued by the Government as soon as they receive specific proposals in this regard from the Tamil Nadu Public Service Commission.

5. This orders issues with the concurrence of the Finance Department - vide its U.O.No.150/FS/P/67-1, dated 13.11.1967.

(By order of the Governor)

**C.A.RAMAKRISHNAN**
**Chief Secretary of Government**

# ANNEXURE

llabus and instructions for proficiency Test in Tamil for dian Administrative Service/Indian Police Service Officers orne on Madras Cadre whose mother tongue is not Tamil.

## I. SYLLABUS

| A. WRITTEN | Duration | Maximum Mark | Minimum Mark |
|---|---|---|---|
| 1) A paper in essay having reference to modern thought with questions on grammer and use of phrases and idioms (S.S.L.C.) Standard) | 3 hours | 100 | 50 |
| 2) Translation into Tamil of an English passage and into English of a Tamil passage | 3 hours | 100 | 50 |
| **B.ORAL** | | | |
| 1) Construing Viva Voce with readiness and accuracy prose passages selected from the S.S.L.C. Text books of the previous academic year | | 100 | 50 |
| 2) Conversing in the language with accuracy and fluency. The test will extend to discussion of such subjects as legal and administrative questions. | | 100 | |

## II. INSTRUCTIONS TO CANDIDATES:

(1) **ELIGIBILITY** : Indian Administrative Service/Indian Police Service Oficers borne on the Madras State Cadre whose mother tongue is not Tamil and who have not completed six year's of service will alone be eligible for appearing for the examination.

(2) **HOLDING OF EXAMINATION** : The examination will be conducted by the Tamil Nadu Public Service Commission once a year i.e. in July of each year. The dates on which and the place at which the examination is to be held will be announced each year by the Tamil Nadu Public Service Commission, sufficiently in advance. The Commission will also fix the last date of application.

(3) **STANDARD OF EXAMINATION** : S.S.L.C. standard in Tamil will be the standard for the examination.

4) **MODE OF PASSING EXAMINATION** :- The candidates should pass the examination by securing atleast the minimum marks referred to in the Syllabus and should also pass both parts (Written and Oral) at the same sitting.

(5) **LIMITS FOR TAKING THE EXAMINATION** : An officer will be allowed only three attempts and the sixth year of service will be the last year when the examination can be taken.

(6) **TEXT BOOKS** : The S.S.L.C. Text Books of the immediately proceeding educational year will be the prescribed text books mentioned under item B (1) of the Syllabus.

(7) **TRAVELLING ALLOWANCE** : An officer appearing for the examination will be allowed single I class fare to and from for the first two attempts only, and the period of absence will be treated as on duty.

**இணைப்பு - 32**

## தமிழ்நாடு அரசு

பொருளடக்கம்

தமிழ் வளர்ச்சி விழா - தமிழ் வளர்ச்சி இயக்ககம் - ஆட்சிமொழி முனைப்புத் திட்டம் விழா நடத்துதல் மற்றும் தொடர் நடவடிக்கைகள் குறித்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

கல்வித் துறை

அரசாணை நிலை எண் 432 நாள் 10.3.1981

பார்வை .

1. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் (சென்னை-1) 6.6.90 -ஆம் நாளிட்ட கடிதம் ந.க. எண் ஆ3/07729/80.
2. அரசாணை நிலை எண் 2595, கல்வித் துறை, நாள் 4.12.1980.

**ஆணை**

ஆட்சிமொழித் திட்டம் 1957ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்று கடந்த 23 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் விளையவில்லை. அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டம் நிறைவேற்றப் படுவதில் மெத்தனமான போக்கு காணப்படுகிறது. இந் நிலையினைப் போக்கவும் அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டம் செம்மையாகவும், முழுமையாகவும் நிறைவேற்றப்படவும், ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து அதனைச் செயற்படுத்த கீழ்கண்ட கருத்துக்களை தமிழ் வளர்ச்சி இயக்குநர் அனுப்பியுள்ளார்.

**1) நோக்கம் :**

குறிப்பிட்ட சில துறைகளைத் தேர்ந்தெடுத்து அத்துறைகளில் ஆட்சிமொழித் திட்டத்தை முழுமையான அளவில் குறிப்பிட்ட காலவரையறைக்குள் சோதனைத் திட்டமாக ஒரு திட்டத்தை உருவாக்கி ஓராண்டு காலத்தில் அத்திட்டம் செயற்படும் முறையிலிருந்து அனுபவங்களின் அடிப்படையில் பின்னர் மற்ற துறைகளுக்கும் அத்திட்டத்தினை நீட்டித்தல் சிறந்த பயன் விளைவிப்பதாக அமையும்.

1. பத்திரப் பதிவுத் துறை
2. சீர்திருத்தப் பணித் துறை,
3. தீயணைப்புத் துறை
4. சிறைத் துறை
5. கால்நடை பராமரிப்புத் துறை

ஆகிய ஐந்து துறைகளும் ஆட்சி மொழி முனைப்புத் திட்டத்தின் கீழ் முதலில் தேர்வு செய்யப் பெறலாம்.

## 2) திட்டத்தின் கோட்பாடுகள்

### (அ) தட்டச்சுகள்

ஆட்சிமொழித் திட்டத்தின் ஆணிவேராகக் கருதப் பெறுகின்ற அடிப்படைத் தேவை, போதிய அளவில் ஒவ்வொரு அரசுத் துறைக்கும் தமிழ்த் தட்டச்சுகள் வழங்குதல் ஆகும். தமிழ்த் தட்டச்சுகளில் பற்றாக்குறை, திட்டத்தின் முன்னேற்றத்தை வெகுவாகப் பாதித்துள்ளது. ஒவ்வொரு துறையிலும் தேவைப்படுகின்ற மொத்தத் தமிழ்த் தட்டச்சுகளின் எண்ணிக்கையை அந்தந்தத் துறைத் தலைவர்கள் கவனித்து, திட்டம் துவங்கிய நாளிலிருந்து ஒரு திங்கள் காலத்திற்குள் அரசுக்குத் தெரிவித்து விட வேண்டும். அரசின் ஒப்பளிப்பு கிடைத்த மூன்று திங்கள் காலத்திற்குள் எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் தமிழ்த் தட்டச்சுகளை அந்தந்தத் துறைத் தலைமை அலுவலகங்களுக்கு வழங்கிட வேண்டும். பிற துறைகளுக்குத் தமிழ்த் தட்டச்சுகள் வழங்கு வதற்காக மேற்கொள்ளப்படும் வாலாயமான முறையில் அல்லாது இத்திட்டத்தில் வருகின்ற ஐந்து துறைகளுக்கும் தனியாகச் சிறப்பு அடிப்படையில் கேட்கப்பெற்ற அனைத்துத் தமிழ்த் தட்டச்சுகளையும் மூன்று திங்கள் காலவரையறைக்குள் வழங்கிட வேண்டும்.

தட்டச்சுகளைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட கோட்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

(1) எந்த ஒரு துறையிலும் துறைத் தலைமை அலுவலகம் தவிர ஏனைய சார்நிலை அலுவலகங்கள் அனைத்திலும் உள்ள ஆங்கிலத் தட்டச்சுகள் திரும்பப் பெறப்பட வேண்டும்

(2) ஏற்பளிப்பு வழங்கப்பெற்ற கடித வரைவுகளை செல்லைப் படி எடுக்கும்போது ஆங்கில வரைவுகள் தட்டச்சின் உதவி யின்றி கையினால்தான் எழுதவேண்டும் என்ற நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் அப்போதுதான் ஆங்கிலம் மிகுதியாக எழுதப்படும் நிலை மாறும் என்பது வெளிப்படை

### ஆ) கடிதப் போக்குவரத்து :

கடிதப் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் ஆங்கிலத்தில் ஒரு கடித வரைவினைத் தயாரிக்க வேண்டுவது இன்றியமையாததென்று கருதப்பட்டால் தொடர்புடைய பிரிவுத் தலைவரின் முன் அனுமதியின்றி அதனை ஆங்கிலத்தில் தயாரிக்க அனுமதித்தல் கூடாது. அவ்வரைவு விதிவிலக்குப் பெற்ற இனத்தைச் சேர்ந்ததா என்பதை ஆய்ந்து பிரிவுத் தலைவர் அனுமதித்த பின்னரே ஆங்கில வரைவுகள் எழுதப்பட வேண்டும். இதைத் தவிர நினைவூட்டுகள், ஒப்பளிப்புக் கடிதங்கள்,

இடைக்கால மறுமொழிகள், அசல் திருப்பு முடிவுகள் ஆகிய நான்கு வரைவுகளும் ஆங்கிலத்தில் இருக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு விதிக்க வேண்டும்.

**இ)பதிவேடுகள் பராமரிப்பு :**

ஆட்சிமொழித் திட்டத்தில் விதிவிலக்குகள் எனக் கருதப் படுபவை அனைத்தும் கடிதப் போக்குவரத்துக்குப் பொருந்துமேயன்றி பதிவேடுகள் பராமரிப்புக்குப் பொருந்தா. எனவே மேற்குறித்த ஐந்து துறைகளைச் சார்ந்த அனைத்துச் சார்நிலை அலுவலகங்களிலும் பதிவேடுகள் யாவும் தமிழில் எழுதப் பெற்று இத்திட்டம் துவங்கிய ஒரு திங்கள் கால வரையறைக்குள் இவ்வலுவலகத்தில் அனைத்துப் பதிவேடுகளும் தமிழுக்கு மாற்றம் செய்யப் பெற்றுவிட்டன என்ற சான்றினை ஒவ்வொரு அலுவலகத் தலைவரும் தமக்கு நேரடியாகத் தொடர்புடைய மேலலுவலருக்கு அனுப்பவேண்டும். இம்மேல லுவலர்கள் சான்றினைப் பெற்றவுடனே சார்நிலை அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்ட ஆய்வினை மேற்கொண்டு குறைகளைவு அறிக்கையைத் துறை மேல்நிலை அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

**ஈ) துறைத் தலைமை அலுவலகத்தில் பொறுப்புகள்**

ஒவ்வொரு துறைத் தலைமை அலுவலகத்திலும், ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டினைக் கவனிப்பதற்கென்று தனியாகத் துறைத் தலைமை அலுவலருக்கு அடுத்த நிலையில் உள்ள ஒரு தொடர்பு அலுவலர் நியமிக்கப் பெற்றுள்ளார். அவரே ஆட்சிமொழி முனைப்புத் திட்டத்தை ஓராண்டுக்குள் செயற்படுத்தி நிறைவு செய்யக் கடமைப்பட்டவர் ஆவார்.

**3. தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் ஆய்வு :**

